சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள்: 10.02.2026

பி.வா.சா.4– ஜான்சிராணி W/o குமரன்

O.S. No.164/2023

(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)

குறுக்கு விசாரணை :

முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். பாகபிரிவினை கோரி வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்தானது முத்தையாவின் சொத்து அல்ல. வழக்கு சொத்து தற்போது பாகம் செய்து கொள்ளப்பட்டு, ராஜேந்திரன், மகாலிங்கம் ஆகியோரின் வாரிசுகளிடம் உள்ளது. 1979ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட பாகபத்திரம் முத்தையா, மகாலிங்கம், ராஜேந்திரன் ஆகியோரிடையே ஏற்படுத்தி கொள்ளப்பட்டது என்றால் சரிதான். முத்தையாவிற்கு மொத்தம் 5 பேர் வாரிசுகள்ஆவார். அதில் மூத்தவர் அமிர்தம் என்னுடைய அத்தை ஆவார். அடுத்து மகாலிங்கம் எனது தகப்பனார். பாப்பா இந்த வழக்கின் வாதி என்னுடைய அத்தை ஆவார். என் சித்தப்பா ராஜேந்திரன் ஆகியோர் வாரிசுகள் இன்னொரு வாரிசு கெட்டி அவர் திருமணமாகாமல் காலமாகிவிட்டார். மேற்படி 5 பேரும் முத்தையாவின் வாரிசுகள் ஆவார்கள். மேற்படி சொத்துக்கள் முத்தையா, மகாலிங்கம், ராஜேந்திரன் ஆகியோருக்கு பூர்விக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். பூர்விக சொத்தில் அனைத்து வாரிசுதாரர்களுக்கும் பங்கு உள்ளதா என்றால் இல்லை. ஏனென்றால் அது ஏற்கனவே பாகம் பிரித்து கொள்ளப்பட்டது. நான் தவறாக சொல்கிறேன் என்றும், சட்டப்படி வாதி, முத்தையாவின் வாரிசுகள் என்பதால் அவருக்கும் சட்டரீதியாக வழக்கு சொத்தில் பாகம் உள்ளது என்றும் ஆகவே இந்த வழக்கு

அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல. அன்றைய தினம் பெண்களுக்கு பாகம் கொடுக்கும் சட்டம் நடைமுறையில் இல்லை. ஆதலால் பாப்பா இந்த வழக்கின் வாதி உரிமை கோருவதற்கு இல்லை. வழக்கு சொத்தை பொறுத்து, தற்போது பல நபர்களுக்கு சொத்துக்கள் உரிமை மாற்றம் செய்யப்பட்டுவிட்டது. வழக்கு சொத்துக்களை பொறுத்து சிலவற்றை முத்தையா அவர்களின் காலத்திலேயே விற்பனை செய்துவிட்டார். ஒரு சில சொத்துக்களை பொறுத்து என் தந்தை மகாலிங்கமும் வில்லங்கம் செய்துவிட்டார். ஆனால் சில சொத்துக்கள் எங்களிடம் தான் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.1 முதல் 6 வரையிலான ஆவணங்கள் வழக்கிற்கு சம்பந்தப்பட்டவை அல்ல என்றால் சரியல்ல. பி.சா.ஆ.7 முதல் 9 வரையிலான ஆவணங்கள் வழக்கின் தீர்ப்புரை என்றால் சரிதான். மேற்படி பி.சா.ஆ.8 ஆவணத்தில் மதுரை 6வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் AS No.75/2023 என்ற வழக்கின் தீர்ப்பாணை நகல் அதில் வாதி தரப்பினர் அல்ல என்றால் சரிதான். பி.சா.ஆ.7,ஆவணத்தில் OS No.54/2019 வழக்கின் தீர்ப்பாணை, அதில் மேற்படி வழக்கின் OS 54/2019ல் இந்த வழக்கின் வாதி தரப்பினர் ேஅல்ல என்றால் சரிதான். தேவையற்ற தரப்பினர் என்பதால் சேர்க்கவில்லை. பி.சா.ஆ.9 ஆவணமான As No.43/2022 மதுரை மாவட்ட நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பாணை, அந்த வழக்கிலும் வாதி பாப்பா தரப்பினர் அல்ல என்றால் சரிதான். நான் தற்போது நீதிமன்றத்தில் இருந்து வாங்கியிருக்கும் தீர்ப்பாணை நகல்களாக பி.சா.ஆ7 முதல் 9 வரையிலான ஆவணங்கள் வாதியை கட்டுப்படுத்தி பெறப்பட்ட தீர்ப்பாணை அல்ல என்பதால் அது வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பூர்விக சொத்துக்களை பொறுத்து 1979ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட பாகபிரிவினை ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. 1979ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட பாகபிரிவினை ஆவணம் வாதியை கட்டுப்படுத்தாது என்றும் அதில் அவர் தரப்பினரும் அல்ல என்றும் ஆகவே வாதி கோரியிருக்கும் ¼ பாகம்

அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. OS 54/2019 வழக்கில் சில சொத்துக்களை இந்த வழக்கில் தாவா சொத்துக்களாக காட்டப்படவில்லை என்பதால் பகுதி பாகபிரிவினை தோஷத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2026.02.10 22:31:17 +0530

Sub Judge
Melur